Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -12 | 24-02-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை-006

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-16A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4747
(ஏ-9205) 077-6059672



வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள

# 5 தேர்தல் மாவட்டங்களிலும் நேற்று கூட்டமைப்பு வேட்பு மனுத் தாக்கல்

## வீட்டுச் சின்னத்தில் போட்டி

**வடக்கு-கிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது. தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய வீட்டுச் சின்னத்தின் கீழ் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

யாழ். மாவட்டத்தில் முதன்மை வேட்பாளரான மாவை சேனாதிராஜாவுடன், நடராஜா ரவிராஜ், எஸ். சிவமகாராஜா, பொன்னம்பலம் கஜேந்திரகுமார், சீ. வி. கே. சிவஞானம், எம். கே. சிவாஜிலிங்கம், என். சிறிகாந்தா, சொலமன் சூ. சிறில், எஸ். சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், சுரேஸ் பிறேமச்சந்திரன், எஸ். கஜேந்திரன் ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் முதன்மை வேட்பாளரான செல்வம் அடைக்கலநாதனுடன் சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிசோர், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஜோன் பெனற் கிறிஸ் ரோபர்,சமியூர் நூர்முகமட் சஜானி, எஸ் கனகரட்ணம், அகஸ்டின் யோசப் மரியநாயகம் சூசை, வினோநோகராதலிங்கம் ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளரான இரா. சம்பந்தனுடன், துரைரட்ணசிங்கம், கௌரி முகுந்தன், சாகுல் கமீட், சதாசிவம் சண்முகநாதன், கே. ரகுநாதன், வி. விக்னேஸ்வரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளரான ஜோசப் பரராஜசிங்கத்துடன் ராஜன் சத்திய

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு தேசியப்பட்டியலில் இடம்பெறும் 12 பேரின் விபரம்

தமிழரசுக்கட்சியின் கூட்டமைப்பு சார்பில் தேசியப்பட்டியலில் இடம் பெறவேண்டியவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள 29 பேரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேரது பெயர்கள் வெளியாகியுள்ளன.

*மா.க.கனகேந்திரன் (ஈழவேந்தன்)(முதன்மை வேட்பாளர், *கந்தவனம் சூரிய குமார் (செயலாளர் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம்)* அப்பாத்துரை குமாரவேல் (வெளிவாரி பட்டப்படிப்புக்கள் அலைய இயக்குனர் யாழ்ப்பாண கல்லூரி வட்டுக்கோட்டை) * ரசீன் முகமட் இமாம் (சட்டத்தரணி) * தம்பிஐயா மகாசிவம்(செயலாளர் தமிழர், ஆசிரியர் சங்கம்)

(8ஆம் பக்கம் பார்க்க)

## சுயேட்சையாக ஆனந்த சங்கரி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு நேற்றுக்காலை 9.30 மணியளவில் வேட்பு மனுத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்தியபின் யாழ்.இல் கூட்டமைப்பு வேட்புமனுத் தாக்கல்

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தின் சார்பில் போட்டியிட நேற்று மாலைவரை சுயேட்சைக் குழு ஒன்று உள்ளிட்ட ஏழுவேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரும் முதலில் கோப்பாயிலுள்ள மாவீரர் துயிலுமில்லத்திற்குச் சென்று மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர். காலை10.30 மணியளவில் அங்கு திரண்ட வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மலரஞ்சலி செலுத்திய பின்னர் அங்கிருந்து தந்தை செல்வா தூபிப்பகுதிக்குச் சென்று அங்கு மலரஞ்சலி செலுத்தினர்.

பின்னர் 12.15 மணியளவில் யாழ்.செயலகத்திற்குச் சென்று தமது வேட்புப்பட்டியலை தாக்கல் செய்தனர். மாவை சேனாதிராசா, த.ரவிராஜ் சுரேஸ்பிரேமச்சந்திரன், கு.கஜேந்திரகுமார், மற்றும் கே.வி.சிவாஜிலிங்கம் ஆகியோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை தமது பிரச்சார நடவடிக்கையை யாழ்.செயலக முன்

(8ஆம் பக்கம் பார்க்க)



யாழ். செயலகத்தில் மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம்

## தேசியத் தலைவரின் கொள்கைக்கு அமைவாகவும் தமிழ்த்தேசியத்தின் உரிமைக்காகவும் செயற்படுவோம்

### வன்னியில் கூட்டமைப்பினர் உறுதியுரை

தேசியத் தலைவரின் கொள்கைக்கு அமைவாகவும், தமிழ்த் தேசியத்தின் உரிமைக்காகவும் செயற்படுவோம் என வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.

நேற்று நண்பகல் 11.00 மணியளவில் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்திற்குச் சென்று அங்கு தமிழீழத் தேசியக் கொடிக்குவணக்கம் செலுத்தினர். பின்னர் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் உருவப்படத்திற்கு முன்பாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். இதன்பின் இவர்கள் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமுதாப் ஆகியோரைச் சந்திதகுக் கலந்துரையாடிய பின் வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்திற்குச் சென்று தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். (10)



வன்னி மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர்கள் மனுத் தாக்கல் செய்த பின்..

## வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் உள்ளூர் மீனவர்கள் மீது இந். மீனவர் தாக்கு ஒருவர் பலியாகியிருக்கலாமென அச்சம்!

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கின் வியாபாரிமூலைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த உள்ளூர் மீனவர்கள், இந்திய மீனவர்களால் நேற்றுக் காலை தாக்கப்பட்டுள்ளனர்.தாக்கப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், இன்பருட்டி வியாபாரிமூலையைச் சேர்ந்த மீனவர்கள் மூவா படகொன்றில் நேற்றுக்காலை மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அவர்கள் வியாபாரிமூலை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை, காலை 11.00 மணியளவில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெடிக்காதிருந்த எறிகணையை வாளால் அரிய முயன்றவர் பலி!

### - மேலும் இருவர் படுகாயம்

அரியாலை - நெடுங்குளம் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் சிக்கி பொதுமகன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இராணுவத்தினரால் ஏவி வெடிக்காதிருந்த எறிகணையொன்றை வாளால் அரிய முற்பட்ட வேளையிலேயே அது வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நண்பகல் 12.30 இற்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவரான வெற்றிவேலு சிவலோகநாதன் (வயது-37) என்பவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் அவருடன் கூடியிருந்த குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்களான அன்ரனி பிரசன்னா (வயது-22) மற்றும் செ. ஜோன்சன் (வயது-24) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# பவளவிழாக் காணும்

கிளிமத்திய கல்லூரியை மென் மேலும் சிறப்புப்புப் பெற வாழ்த்துகின்றோம்.

பழையமாணவர்கள்,
(மருத்துவ சங்கம்
கிளிநொச்சி)

(4262)

# ஏலவிற்பனை

எல்ப்வான் - த12-9835
இயந்திர இலக்கம் - 3எல்-2846360
அடிச்சட்ட இலக்கம் - • எல்எச்-123-0008732

கிளிநொச்சி கல்விக்கழகத்திற்குரிய ஓடக்கூடிய நிலையிலுள்ள மேற்படி எல்ப் வான் ஏலவிற்பனைக்கு விடப்படுகின்றது. இவ்வாகனம் கிளிநொச்சி கல்வி அலுவலகத்தில் வைத்து 27-02-2004 காலை 09.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

ப. அரியரத்தினம்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-9302)

முத்து ஐயன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) ஒட்டுசுட்டான்.

## கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக்கூட்டங்கள்

*கிளை இல:04* *கிளை இல:06*

2004-02-21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த மேற்படி கூட்டங்கள் போதிய அங்கத்தவர்கள் சமுகமின்மையால் நடைபெறவில்லை. எனவே நடைபெறாத கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுக் கூட்டங் கள் எதிர்வரும் 2004-03-07 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு குறிப்பிட்ட கிளைகளில் நடைபெற உள்ளது. எனவே குறிப்பிட்ட கிளை உறுப்பினர்கள் குறித்த தினத்தில் கிளைகளிற்குச் சமுகம்கொடுத்து தங்கள் கிளைக் குழுவையும் சங்கத்திற்கான பொதுச் சபைப் பிரதிநிதிகளையும் தெரிவு செய்யுமாறு வேண்டப்படு கின்றீர்கள்.

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 04 | கணேசன் கிளை | கணேசபுரம் கிளைநிலையம் மு.ஐ. கட்டு |
| 06 | மன்னா கண்டல் | மன்னா கண்டல் கிளை நிலையம் |

செயலாளர்,
மு.ஐ.க.ப.நோ.கூ.சங்கம்,
ஒட்டுசுட்டான்.

(சி-7166)

## வரி விளம்பரம்

*லொறி விற்பனைக்குண்டு*

டாட்டா மெடல் நம்பர் 1109 கன்டர் நம்பர் WPHK 20 அரந் உள்ள பேடி அடித்துள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர் இல.470, 6ஆம் யூனிற், இராமநாதபுரம். (4265)

## கலந்துரையாடல்

முல்லை மாவட்ட சிக்கன கூட்டுறவுச் சங்கங்களின் 2003 ஆம் ஆண்டு தொடர்பாகவும் 2004 ஆம் ஆண்டு திட்டங்கள் தொடர்பானதுமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு முல்லைமாவட்ட சிக்கனக் கடனு தவி கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூசைமுத்து தலைமையில் ஆரம் பமான நிகழ் வில் கடன் திட்டம் தொடர்பான கருத்துரைகளை முல்லை மாவட்ட அரச அதிபர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர், திட்டப்பணிப்பாளர், சி.க.கூ.ச. மாவட்டச் செயலாளர் ஸ்ரான்லின், த.நி.சே. கூட்டுறவுப் பகுதி பிரதிநிதி, வன்னிப புனர் வாழ்விற்குத் துணை புரியும் அமைச்சின் பிரதித் திட்டப் பணிப்பாளர் செல்வி ஜெயவதனா ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள்.

28 சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத் தவர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை கேட்டறிந்தனர். (20)

## தளபாடங்கள் மீட்பு

இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் களவு போன தளபாடங்கள் தமிழீழ காவல் துறையினரால் மீட்கப் பட்டுள்ளன.

கடந்த 16ஆம் திகதி இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ரூபா 23ஆயிரம் பெறுமதியான தளபாடங்கள் களவு போனதாக குறித்த பாடசாலையின் முதல்வர் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து பளை காவல்பணி மனையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு குறித்த தளபாடங்கள் உடையார்கட்டு பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் இன்று மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

*முல்லை–வடக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால்.*

## கணக்காளர் வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

வயது எல்லை :- 18-45 வயதுவரை

கூட்டுறவுத் துறை சார்ந்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

மேற்படி 104/10, சம்பளக் குறியீட்டு இலக்கம் கொண்ட கணக்காளர் பதவிக்குக் கீழ் தரப்பட்ட தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இவ்விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 2004.03.15ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக, தபால் உறையில் இடது பக்கத்தில் கணக்காளருக்கான விண்ணப்பங்கள் என தலைப்பிட்டு தலைவர் முல்லை-வடக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம் வலைஞன் மடம், முள்ளிவ ாய்க்கால் எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கணக்காளர் சம்பளத்திட்டம்:- (104/10) 5500, 80X10-90X10-7200

தகைமைகள் (அ) கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர், அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியிலான 02 (இரண்டு) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூ.பணியாளரின் 12வது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 (நான்கு) வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் க/குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் க/கு துறையிலான 02 (இரண்டு) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க.பொ.தரத்தில் (உயர் தரம்) கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

திகதி :- 20.02.2004

தலைவர்,
முல்லை-வடக்கு ப.தெ.வ.கூ.சங்கம்,
வலைஞன்மடம், முள்ளிவாய்க்கால்.

(3991)

# துயர் பகிர்வோம்

## அமரர் கந்தையா சாந்தலிங்கம்

எமது வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.மோகன்ராஜ் அவர்களின் அன்புத் தந்தை கந்தையா சாந்தலிங்கம் அவர்கள் 2004-02-22 அன்று அகால மரணம் அடைந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர் சங்கத்தினர், மு/உடையார்கட்டு ம.வி.*

(3992)

# துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 08 □ 07 □ 1927



இறப்பு 21 □ 02 □ 2004

## சின்னப்பு- நடராசா

எமது பாடசாலை ஆசிரியரான நா.கோணேஸ்வரன் அவர்களது தந்தையாரரான சின்னப்பு-நடராசாவின் பிரிவினால் துயருறும் குடும்பத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அதிபர், ஆசிரியர்கள், மு/வள்ளிபுனம் க.உ. வித்தியாலயம்.*

(சி-7165)

# "கண்ணீர் வணக்கம்"

தாய் மடியில் 1944 • 09 • 03



இறையடியில் 2004 • 02 • 22

## அமரர் கந்தையா சாந்தலிங்கம் அவர்கள்

பாசமதை வீசுகின்ற "பூ" முகமும் - உம்
வைகறையில் புலர்ந்துவரும் தேன் மொழியும்
கட்டியிழந்து கலந்திட்ட உம் உடலும்
பட்டுவிட்ட கோலம் பார்க்க கிடைக்கவில்லை.
விதி வந்து வீதிதனில் உம் உயிரை
சதிசெய்து அது கொண்டு போக
உம் மக்கள் எல்லோரும் தவிக்கின்ற
நிலை பார்க்க எம்மாலே முடியலையே
சாந்தமென நீளுகின்ற சாந்தலிங்கம் - உம்
பேரிழப்பால் கலங்கியிங்கு பதைக்கிறோமே நாமெல்லாம் இன்று.
வீரமதை தன்னகத்தே கொண்டதுங்கள் - எம்
பணிமனையில் சேவையாற்றும் மதிதரன், சகிலாதேவி
இருவரது துன்பமதை தாங்கியின்று துடிக்கிறோமே எல்லோரும்.
நல்ல பெரும் காரியத்தை நற்பலவாய்
செய்ததெங்கள் உயர் ஞான பெரியவரே உம் சாந்தி
நிலைபெற்று தினம் வாழும் இது உண்மை.

குறிப்பு : இன்று 11 மணிக்கு பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

ஊழியர் நலன் பேணல் கழகம்
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-9401)

# கெயிட்டியில் கிளர்ச்சியாளர் முன்னேற்றம் வடபகுதி துறைமுக நகரமும் வீழ்ச்சி!

**கெயிட்டியின் இரண்டாவது பெரிய நகரம் கிளர்ச்சியாளர் வசம் வீழ்ந்துள்ளது. சனாதிபதிக்கு எதிராக போராடிவரும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர்.**

இரண்டாவது பெரிய நகரமான ஹெப்சிட்டின் தொடர்ந்து கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருந்து வருவதாக வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கெயிட்டியின் வடபகுதி துறைமுக நகரமான ஹெப்சிட்டியின் மீது கிளர்ச்சியாளர்கள் நேற்றுமுன்தினம் தாக்குதலை ஆரம்பித்திருந்தனர். சில மணிநேர சண்டைக்குப் பின் அவர்களின் கட்டுப்பாட்டில் நகரம் வந்தது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த இறுதிக் கோட்டையாக கருதப்பட்ட இந் நகரை குறைந்தளவிலான எதிர்ப்புக்களின் மத்தியில் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இந் நகரில் 5லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இத் தாக்குதலின் போது இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அத்துடன் சனாதிபதி அரிஸ்டைட்டின் அதிகாரத்தின் சின்னங்களாகக் கருதப்பட்ட நான்கு பொலிஸ் நிலையங்களும் சூறையாடப்பட்டுள்ளதுடன் தீயிட்டு எரிக் கப்பட்டுள்ளன. மேலும் நூறிற்கும் அதிகமான சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



இஸ்ரேலையும் மேற்குக்கரை நகரையும் பிரிக்கும் பாதுகாப்பு வேலியின் நுழைவாயிலருகில் பலஸ்தீனர் ஒருவரை சோதனையிடும் இஸ்ரேலிய இராணுவம்.



கெயிட்டி தலைநகர் போட்ஓ பிரின்ஸில் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது எரிக்கப்பட்டகாரின் அருகில் நடந்து செல்லும் கெயிட்டி வாசி.

# அணுவாயுத திட்டங்கள் முன்னெடுக்கப்படும் விட்டுக்கொடுக்கும் பேச்சிற்கு இடமில்லை

## பாகிஸ்தான் சனாதிபதி அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அணுவாயுத திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் இதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்தார்.

அணுவாயுதங்களை காவிச் செல்லும் ஏவுகணையை இராணுவத்தில்இணைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அணுவாயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணையை இராணுவத்திற்கு ஒப்படைக்கும் நிகழ்வு சனாதிபதி முஷாரப் தலைமையில் இடம்பெற்றது. இந்த ஏவுகணை 290 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இலக்கைச் சென்று தாக்கும் வல்லமை கொண்டுள்ளது.

இந்திய பாகிஸ்தான் நாடுகளிடையே சமாதானப் பேச்சுக்களுக்கான சூழல் தோற்றம் பெற்றுள்ள நிலையில் முஷாரப்பின் மேற்படி கருத்து அதனைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

# அகதிமுகாம் மீது தாக்குதல் நூறுக்கும் அதிகமானோர் பலி!

## –உகண்டாவில் கொடூரம்

உகண்டாவின் வடவிலா மாவட்டத்தில் அமைந்துள்ள குகார் என்ற அகதிமுகாம் மீது தீவிரவாதிகள் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குலில் 100 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

கடவுளின் எதிர்ப்பு இராணுவம் என்ற தீவிரவாதக் குழுவினரே இத் தாக்குதலை மேற்கொண்டனர். நான்காயிரம் பேர் தங்கியிருந்த இம் முகாமினுள் நுழைந்த இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் முகாமைத் தீயிட்டு எரித்துள்ளனர்.

# ஜெருசலேமில் தற்கொலைத் தாக்குதல் எண்மர் உடல் சிதறிப்பலி; பலர் படுகாயம்!

## –இஸ்ரேலுக்கு வலுச்சேர்ப்பதாக கவலை

ஜெருசலேமில் நேற்று முன்தினம் பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில்08 பேர் உயிரிழந்துள்ளதுடன் 60இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.



ஜெருசலேமில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் சேதமுற்ற இஸ்ரேலிய பேருந்தை சோதனையிடும் இராணுவத்தினரும் பொலிசாரும்.

குண்டுத்தாக்குதல்களை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து இஸ்ரேலிய தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், உலக நீதிமன்றம் முக்கியத்துவம் மிக்க இஸ்ரேலிய வழக்கொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் மேற்கு கரையில் இஸ்ரேலியர்களால் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்கின்ற வேளை இத் தாக்குதல்கள் இஸ்ரேலின் வாதத்திற்கு மேலும் வலுச் சேர்க்குமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். இத் தாக்குதலுக்கு யசீர் அரபாத்தின் நெருங்கிய அமைப்பான அல்-பற்றா உரிமை கோரியுள்ளது. ஆனால் இதனை அரபாத்தின் அலுவலகம் முற்றாக மறுத்துள்ளது.

# ஈரானில் தேர்தலின் பின் வன்முறைகள் அதிகரிப்பு!

(தெஹ்ரான்)

ஈரானில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இத்தேர்தல் நீதியாகவும், சுதந்திர அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வில்லையென சீர்திருத்தவாதிகள் குற்றம்சாட்டியுள்ளனர். தேர்தலைத் தொடர்ந்து பலநகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் போது 08 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுத் தேர்தலில் அடிப்படைவாதிகள் வெற்றிபெற்றுள்ளதாக செய்திகள் வெளியிட்டுள்ளமை தெரிந்ததே.

# பா.ஜ.க-அ.தி.மு.க கூட்டணிக்கு அத்வானியே சூத்திரதாரி

## -தி.மு.க.தலைவர் கருத்து

(சென்னை)

அ.தி.மு.கவும் பா.ஜ.க.வும் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ள காரணமாக இருந்தவர் துணைப்பிரதமர் அத்வானி என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவர்களின் கூட்டணியை தி.மு.க. தலைமையிலான சனநாயக கூட்டணி தோல்வியடையச் செய்யுமென தெரிவித்துள்ளார்.

# கர்நாடக சட்டப் பேரவை கலைப்பு

கர்நாடக மாநில சட்டப் பேரவையை ஆளுனர் சதுர் வேதி நேற்று கலைத்துள்ளார். இதனால் எதிர்வரும் மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து சட்டப் பேரவைத் தேர்தலையும் நடத்துவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. தேர்தல் நடைபெற்று முடியும் வரை பதவியைத் தொடருமாறு கிருஷ்ணா தலைமையிலான மாநில அரசை ஆளுனர் கேட்டுள்ளார்.சட்டப் பேரவை கலைக்கப்பட வேண்டுமென கடந்த வாரம் கர்நாடக மாநில அமைச்சரவை கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர்பதவியில்எனக்கு விருப்பமில்லை பா.ஜ.க.அரசை அகற்றுவதே இலக்கு

## காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி

(புதுடில்லி)

பிரதமர் பதவியில் எனக்கு விருப்பமில்லையென காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

டில்லியில் தனியார் தொலைக் காட்சி ஒன்றிற்கு நேற்று முன்தினம் பேட்டியளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி அரசை அகற்றுவதற்கு நான் முன்னுரிமை அளிக்கின்றேன்.

அத்துடன் நான் வெளிநாட்டவர் என எப்போதும் நினைக்கவில்லை. கிராமப்பகுதிகளுக்குச் செல்லும்போது முற்றிலும் இந்தியர் என்ற உணர்வேஎனக்குள் மேலோங்கியிருக்கிறது.

மக்களின் பிரச்சினைகளைப் பற்றி கவலைப்படாத பா.ஜ..கட்சி இவ்விவகாரத்தை தேவையில்லாமல் பெரிதுபடுத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். இதனால் அவர்களுக்குத்தான் எதிர்மறையான விளைவு ஏற்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் மனித உரிமைகள் மீறல்!

(புதுடில்லி)

காஷ்மீர் பிராந்தியத்தில் கடமைபுரியும் கீழ் மட்ட இராணுவ வீரர்கள் சிலர் மனித உரிமைகளை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் நடந்துகொள்வதாக காஷ்மீர் முதல்மைச்சர் முப்தி முஹம்மத் சையித்தின் ஏற்றுக்கொண்டுள்ளார்.

காஷ்மீரில் இந்திய இராணுவம் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களை எதிர்த்து மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த அசான் உந்து என்பவர் தீக்குளிக்கமுயற்சித்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்திய காஷ்மீர் பகுதியில் வன்முறைகளால் 40,000த்திற்கு மேற்பட்ட பொது மக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாக்தாத்தில் நேற்று முன்தினம் அநாமதேயதுப்பாக்கிதாரரினால் கொல்லப்பட்டஅனி முஸ்லிம் மத குருவின் உடலைக் காவிச் செல்லும் ஈராக்கியர்கள்.




## தமிழீழ தேசியப் பெருவிளையாட்டு விழா-03 நடைபெற்று முடிந்த போட்டிகளிலிருந்து...

தமிழர் தாயகத்தின் மாவட்ட அணிகள் கலந்து கொள்ளும் தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா கிளிநொச்சியில் இன்று ஐந்தாவது நாளாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

ஒன்பது வெற்றிக்கிண்ணங்களுக்காக நடைபெற்று வரும் இவ்விளையாட்டு திருவிழாவில் எந்த அணி எந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றப் போகின்றது என்பதை ரசிகர்கள் தமக்கிடையே பகிர்ந்து கொண்டுள்ள நிலையில் சில போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள்



நேற்று ஆரம்பமாகின.

இதில் உதைபந்தாட்டம், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளே அரையிறுதியை எட்டியிருந்தன. இரவு பகலாக நடைபெற்று வந்த இப்போட்டிகளில் உதைபந்தாட்டத்தில் யாழ்-மன்னார் அணிகளும், திருமலை-வவுனியா அணிகளும் மேற்படி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற விறுவிறுப்பான லீக் ஆட்டத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு அணிகள் அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்தன.

இம்முறை உதைபந்தாட்டத்தைப் பொறுத்தவரை அம்பாறை அணியைத் தவிர ஏனைய அணிகள் தமது உச்சத்திறனை வெளிப் படுத்தியதைக் காணமுடிந்தது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார், அம்பாறை, திருமலை, யாழ்ப்பாண அணிகள் அரையிறுதிப் போட்டிகளில் மோதுகின்றன. இதில் யாழ்ப்பாணம் அணியைத் தவிர ஏனைய அணிகள் அரையிறுதிப்போட்டிகளில் மோதுகின்றன. இதில் யாழ்ப்பாணம் அணியைத் தவிர ஏனைய அணிகள் அரையிறுதிக்கான வாய்ப்பை இலகுவாகக் கைப்பற்றின.

இது இவ்வாறிருக்க பெண்களுக்கான தாச்சிப்போட்டியில் வவுனியா, திருமலை அணிகளும், ஆண்களுக்கான தாச்சிப்போட்டியில் யாழ்.முல்லை அணிகளும், ஆண்களுக்கான கபடிப் போட்டியில் அம்பாறை-யாழ் அணிகளும், பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி, முல்லை அணிகளும் துடுப்பாட்டத்தில் வவுனியா-மட்டு அணிகளும் மூன்றாம் நாள் போட்டி நிறைவில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தெரிவாகின. மற்றும் ஆண்களுக்கான விறுவிறுப்பான மின்னொளியில் நடைபெற்ற கரப்பந்தாட்ட முதலாவது போட்டியில் திருமலை அணி, மன்னார் அணியை வெற்றி கொண்டது. இப்போட்டி சர்வதேச போட்டி ஒன்றை கண்டுகளித்த பிரமிப்பை ரசிகர்களிடையே ஏற்படுத்தியிருந்தது. இதேவேளை வலைப்பந்தாட்டப்



போட்டியில் நடைபெற்று முடிந்த முதல் இருபோட்டி களில் மன்னார், யாழ் அணிகள் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

இம்முறை புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட போட்டிகளான இருபாலாருக்குமான கபடி, தாச்சிப் போட்டிகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் ஏனைய மாவட்டங்களை விட ஆரம்ப போட்டி களில் உச்ச திறனை வெளிப்படுத்தியிருந்தன. இதில் பெண்களுக்கான கபடியில் கிளிநொச்சி அணி அம்பாறை அணியை 47-11என்ற புள்ளி வித்தியாசத்திலும் முல்லை அணி மன்னார் அணியை 65-21 என்ற புள்ளி வித்தியாசத்திலும் தோற் கடித்து



முன்னிலையில் திகழ்கின்றன. ஆண்களுக்கான கபடியில் முதல் இரு போட்டிகளில் யாழ், அம்பாறை அணிகள் வெற்றிபெற்ற போதும் கிளிநொச்சி, அம் பாறை அணிகளுக்கிடையிலான போட்டி கடைசி நேரம் வரை எந்த அணி வெற்றிபெறும் என்ற நிலையை ஏற் படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவை ஒருபுறம் இருக்க உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணம் மன்னாருக்கா? திருமலைக்கா? என்ற கருத்து பரவலாக நிலவ ஏனைய போட்டிகளில் ஒவ்வொரு மாவட்ட அணிகளும் தமது மாவட்டத்துக்கு ஒரு போட்டி யிலாவது வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்து பெருமை சேர்க்க வேண்டும் என்ற நிலையில் போட்டிகள் விறு விறுப்பை எட்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப் பாகும்.இந்த நிலையில் எந்தக் கிண்ணத்தை எந்த அணி கைப்பற்றப் போகின்றது என்ற கேள்விக்கான விடை எதிர்வரும் மூன்று நாட்களில் கிடைத்துவிடும்.

**ஜெயந்திரன்**

## விளையாட்டு வினையாகிவிடக் கூடாது

இன்றைய உலகில் அரசியல் போட்டா போட்டிகள் காணப்படுவதைப் போலவே விளையாட்டிலும் தீவிர போட்டிகளில் நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக சர்வதேச விளையாட்டுக்களான உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் என்பவை முன்னேற்றம் அடைந்து வருவது போலவே போட்டிகளும் தீவிரமடைந்து வருகின்றன. இதற்கு பங்குபற்றும் ஒவ்வொரு நாடும் தானே உலகில் சிறந்த வீரர்களைக் கொண்ட நாடாகத் திகழ வேண்டும் என எண்ணுவதே காரணமாகும்.

இதுவும் ஓரளவு இயல்பானதேயாயினும் சில நாடுகள் இன, நிற வர்க்க பேதங்களையும் விளையாட்டுக்களில் கடைப்பிடிக்கின்றமை கவலையளிக்கின்றன.

விளையாட்டு விதிகளுக்கு அமைவாக வெற்றிதோல்விகளை சமமாக மதிப்பதன் மூலம் தமது மதிப்பைமட்டுமன்றி அனைவரினதும் ஒற்றுமையும் பேணப்படுகின்றது. இதனைப் புரிந்துகொண்டு அணிவீரர்கள் நடந்துகொள்வது அவசியம். ஏனெனில் அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடந்து முடிந்த மும்முனைக் கிறிக்கெற் தொடரில் இந்தியா அவுஸ்திரேலிய அணிகளின் நடவடிக்கைகள் பற்றி ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் விளையாட்டு விதிகளை மீறும் செயலாகவே கருதப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணி இத்தொடரை வென்றுவிட்டதாகக் கருதி தமது இறுமாப்பை வெளிக்காட்டியுள்ளது. அது ஏனைய அணி ஒன்றுடன் சிலவேளைகளில் தோல்வியைத் தழுவினால் என்னவாகும். அதுபோலவே இந்திய வீரர்களும் இத்தொடரை வென்றிருந்தால் உலகச் சம்பியனை வென்றுவிட்டோம் என்ற குதூகலத்தால் எதிரணியை கேலி செய்திருக்கலாம். இவை தேவையற்ற நடவடிக்கைகளாகவே கருதமுடியும். அத்துடன் இவை ரசிகர்களையும் வெறுப்புகொள்ளச் செய்யும் நடவடிக்கைகள் ஆகும்.

அண்மையில் பல சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் களம் அமைத்த இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிறிக்கெற் போட்டிகள் இறுதியாக பாகிஸ்தானில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 14 வருடங்களுக்குப் பின் இந்திய அணி பாகிஸ்தான் செல்லவுள்ளமை கிறிக்கெற் ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கின்றது.

இப்போட்டிகளிலும் மேற்கூறப்பட்டவாறு வீரர்களின் நடவடிக்கைகள் அமையுமாயின் அது பாரதூரமான விளைவை ஏற்படுத்த லாம். காரணம் இரு நாடுகளி னதும் எல்லைப் பிரச்சினை காரணமாக இருந்துவரும் கசப்புணர்வு அண்மைக்கால சமிக்ஞைகளால் சற்றுத் தளர்ந்துள்ள நிலையில் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இந்நிலையில் இருஅணிகளினதும் பாதுகாப்பு முக்கிய பிரச்சினையாகும். விளையாட்டு வினையாகிப் போன கதைபோல ஆகிவிடக்கூடாது. இரு அணிகள் மட்டுமல்ல இருநாட்டு ரசிகர்களும் இச்சந்தர்ப்பத்தில் பொறுமையிழக்கக்கூடாது. இந்தச் சுற்றுப்போட்டிகள் சுமுகமாக நடைபெறும் பட்சத்தில் சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள மறுக்கும் இங்கிலாந்து அணியினருக்கு ஒரு சவாலாக அமையும்.

எனவே விளையாட்டுக்களில் அரசியலையும் இன, மத, நிற வேறுபாடுகளையும் ஒதுக்கி விளையாட்டு விதிமுறைகளை அனுசரித்து போட்டிகளில் அணிகள் பங்கேற்குமாயின் அதுமிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாக அமையும் என்பது திண்ணம்.

**வடிவேல்**



## அலுவலர்களாகத் தெரிவு

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடாத்தப்பெற்ற தொழில் நுட்ப அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களான அன்ரன் அன்பழகன் (உருத்திரபுர ம.வி), ஜோயல்பியசீலன்(புதுமுறிப்பு விக்கினேஸ்வரா), இ.சிவலிங்கம் (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா), இளங்குமரன்(பளைமத்திய கல்லூரி), மகிந்தன் (வேம்பொடு கேணி அ.த.க. பாடசாலை) ஆகியோரும் விளையாட்டு அலுவலர் க.புவனேந்திரராசாவும் சித்தியெய்தியுள்ளனர்.

இப்பரீட்சையில் சித்தியெய்தி



யோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்கடந்த 21.02.2004 சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு கிழக்கு மாகாண இளைஞர் சேவைகள் மன்ற இணைப்பாளர் குணரட்ணம் "இப் போட்டிப் பரீட்சைகளை தமிழிலும் நடத்த ஆரம்பித்த ஐந்து வருடங்களில் இன விகிதாசாரத்தை மிஞ்சிய அளவில் தமிழ்மொழி மூலமானோர் தமது ஆற்றலை நிரூபித்து சித்தியெய்தியுள்ளனர்.

தற்போது கிளிநொச்சியில் தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா நடைபெற்று வருகிறது. சர்வதேச தரத்துக்கு எமது இளைஞர்களை விளையாட்டுத் துறையில் உயர்த்துவதற்கு தமிழீழ விளையாட்டுத்துறை மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை விளையாட்டுத் துறையில் நிர்வாகத் திறனை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ள இப்போட்டிகளில் நடுவர்களாக பங்காற்ற இங்குள்ளோர் எதிர்காலத்திலாவது முன்வர வேண்டும்" எனவேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் தலைமை உரையாற்றிய மேற்படி சங்கத்தலைவர் சுனில் ஜெயவீர "1958ம் ஆண்டு இலங்கையரான எதிர்வீரசிங்கம் உயரம் பாய்தலில் தங்கப்பதக்கம் பெற்றபின்னர் தற்போது தான் ஒருசிலர் 6 அடிக்கு மேல் உயரம் பாய்ந்துள்ளனர். இந்தளவு கால இடைவெளியில் இத்துறையில் கவனம் செலுத்தப்படவில்லை" எனச் சுட்டிக்காட்டினார். (சோ)

# பரபரப்பை ஏற்படுத்தியுள்ள பௌத்த பிக்குகளின் தேர்தல் பிரவேசம்

வேலவன்

ஏப்ரல் மாதம் 2-ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் 13-வது பாராளுமன்றத்திற்கான தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவுக்கு வருகிறது. பிரதான கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை நேற்று முன்தினம் பூர்த்தி செய்து நேற்று அநேகமான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டும் விட்டன. இன்றுடன் இது தொடர்பான முழு விபரங்களும் வெளியாகிவிடும்.

இம்முறைத் தேர்தலில் இரு பிரதானக் கூட்டணிகளுக்கிடையேயான போட்டியே இருக்குமென பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. கருத்துக்கணிப்புகளும் இதனடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தேசிய பிக்குகள் முன்னணி ஜாதிகஹெல உறுமய(முன்னாள் சிஹல உறுமய) சார்பில் போட்டியிட முன்வந்துள்ளமையானது பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று கூறமுடியாது விட்டாலும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது உண்மை.

வெறுமனே ஜாதிகஹெல உறுமய வழமையான தமது உறுப்பினர்களுடன் தேர்தலில் ஈடுபட்டிருக்குமாயின் அது பரபரப்பை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஏனெனில் 11வது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் இலங்கை முழுவதும் போட்டியிட்டு திரட்டிய வாக்கு மூலம் ஒரேயொரு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரை மட்டும் பெற்ற அது, 2001 ஆம் ஆண்டு 12ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் அதனையும் இழந்தது.



கடந்த இரண்டு வருட காலத்தில் அது பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை. குரங்குபாஞ்சான் நோக்கி பெரும் பிரச்சாரத்தின் மத்தியில் ஊர்வலம் சென்ற அது இடையில் போராட்டத்தைக் கைவிட்டு தோல்வியுடன் திரும்பியமையும் கொழும்பில் இடம்பெற்ற சிங்கள-தமிழ் கலைக் கூடலில் குழப்பம் விளைவிக்க முயன்று அடிவாங்கி ஓடியமையையும் தவிர அது பெரிய போராட்டம் எதனையும் நடத்திவிடவில்லை.

ஆனால் இப்பொழுது பெயர் மாற்றம் செய்யப்பட்டு பௌத்தமகா சங்கத்தின் பின்னணியுடன் தேசிய பிக்குகள் சம்மேளன உறுப்பினர்கள் சுமார் 260 பேரை வேட்பாளராக நிறுத்தியுள்ளமை பரபரப்பையும் வாதப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட முடிவு செய்ததன் மூலம் நேரடியாக அரசியலில் குதித்து விட்டனர். இதற்கு எதிரான கருத்துக்கள் வேறு சில பௌத்த அமைப்புகள் தென்பகுதி அமைப்புகளிடமிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

"பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த பௌத்த சமயத்தின் கோட்பாடுகளுக்கு, தேசிய ரீதியிலும்,, சர்வதேச ரீதியிலும் அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இது நாட்டுக்கு பேராபத்தை விளைவிக்கும்" என்கிறார் அமரபுர பீடாதிபதி.

இவ்வாறு சில பௌத்த பீடங்களும் அமைப்புக்களும் கண்டனம் தெரிவிக்கையில், 'நாட்டை அழிவிலிருந்து பாதுகாக்கவே தாம் தேர்தலில் போட்டியிடுவதாக தேசிய பிக்குகள் முன்னணி கூறுகிறது.

"நாட்டையும், பௌத்தத்தையும் பாதுகாக்க பிக்குகள் முன்வருவது 2500 வருட கால பௌத்தமத சரித்திரத்தின் வழமையான விடயம். புதிதாக நாம் எதனையும் செய்துவிடவில்லை' என்கிறார் தேசிய சிங்கள உரிமைகள் சங்கச் செயலாளர் உடுவேதம்மலோக தேரர்.

இவர்கள் தாம் தேர்தலில்இருந்து விலகிக் கொள்வதற்கு விதித்துள்ள நிபந்தனைகளைப் பார்க்கும்போது பௌத்தத்தையும் நாட்டையும் பாதுகாப்பது என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

0. இலங்கை சிங்கள பௌத்த மக்களின் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

0. தேசிய இனமான சிங்களவர்களுக்கே சகல உரிமைகளும் உண்டு.

0. இலங்கையை இன, மொழி,மத அடிப்படையில் பிரிவினைக்கு உட்படுத்த முடியாது.

0. மதமாற்றத் தடைச்சட்டத்தை உடன் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

என இவை நிபந்தனை விதித்திருப்பது இலங்கைக்கு பேராபத்தா? இல்லையா? என்பதைப் புரிந்துகொள்ள உதவும்.

இது ஒருபுறமிருக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது இவர்கள் விதித்த முதல் நிபந்தனை 'புலிகளுடன் பேசக் கூடாது' என்பதாகும்.

இதற்குச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மனதளவில் சம்மதமிருப்பினும் நேரடியாக ஒப்புக்கொள்ளக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதே யதார்த்தமாகும். இப்பொழுது தேர்தலில் போட்டியிடுவது என்பதில் பிக்குகள் உறுதியாக இருக்கின்றனர் என்பது வெளிப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில் யாழ்.இலும் இக்கட்சி வேட்பு மனுவைத் தாக்கல்செய்துள்ளது.

தேர்தலில் இவ்வாறு பௌத்த பிக்குகள் போட்டியிடுவது தென்னிலங்கையின் மீண்டும் மூன்றாவது பலமான அணி உருவாக வழிவகுக்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. 70 வீதம் பௌத்த மக்களைக கொண்ட சிறிலங்கா போன்ற மதச் சார்புள்ள நாட்டில் இது தாக்கத்தை விளைவிக்கும் என சில விமர்சகர்கள் கூறுகின்றனர். அண்மையில் கங்கொடவில சோமதேரர் எனும் பௌத்த பிக்கு ரஷ்யாவில் மரணம் அடைந்ததை அடுத்து தென்பகுதியில் கிறிஸ்தவ வழிபாட்டிடங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றமை, அதனையடுத்து மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென எழுந்துள்ள கோரிக்கை, முன்னதாகவும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத உணர்வுகள் என்பனவற்றை வைத்துக் கொண்டு அவர்கள் இவ்வாறு தெரிவிக்கின்றனர்.



சங்கு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ள பிக்குகள் வேட்பு மனு தாக்கல் செய்யும் போது சம்மேளனத் தலைவர் எல்லாவல மேதானந்த தேரரும் மாவட்டத்தலைவர் உடுவே தம்மாலோக தேரரும் சங்கிலிருக்கும் நீரை பருகுகின்றனர்.

இதேவேளை பௌத்த பிக்குகளின் தேர்தல் குதிப்பு ஐக்கிய தேசிய முன்னணியை விட புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைத்த சமாதான முயற்சிகளுக்கான மனுவையே இம்முறையும் முன்வைக்கிறது. எனவே சமாதானத்திற்கு ஆதரவான தென்னிலங்கை மக்களும் சக்திகளும் ஐக்கிய தேசிய முன்னணியையே ஆதரிப்பர். அதேவேளை சமாதானத்திற்கு எதிரான சக்திகளின் வாக்குகளை இன்றைய நிலையில் ஐ.தே.மு. எதிர்பார்க்கவும் மாட்டாது. ஆனால் கடந்த இரண்டு வருட காலமாக சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினராலும் ஜே.வி.பி.யினராலும் கட்டியெழுப்பப்பட்ட உணர்வுகளின் அறுவடை தமக்குக் கிடைக்குமா? என்ற சந்தேகம் இவ்விரு கட்சிகளின் கூட்டணிக்கு ஏற்பட வாய்ப்புண்டு. ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் வெறுப்புற்றிருப்போரினதும், சமாதான முயற்சிகளுக்கு எதிரானோரினதும் வாக்குகளைத் திரட்டி தேர்தலில் வெற்றி பெற இக் கூட்டணி கண்ட கனவை சிதைக்கும் ஒரு செயலாகவே பௌத்த பிக்குகளின் தேர்தல் பிரவேசம் அமைகிறது எனலாம். அதாவது சமாதானத்திற்கெதிரான சக்திகளின் வாக்கு ஜாதிகஹெல உறுமயவுக்கு சென்றுவிடுமோ? என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு நடக்குமாயின் அதற்கான வித்தையை இட்டவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் இப்பொழுது கூட்டுச் சேர்ந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஜே.வி.பி யினருமே. ஏனெனில் இரண்டு வருடங்களுக்கு முன் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக சிங்கள மக்களில் பெரும்பான்மையோர் வாக்களித்திருந்தபோதும் அம்முயற்சிகளுக்கெதிராக இடைவிடாது போராட்டம் நடத்தியவர்கள் இவர்கள்.

ஆரம்ப காலத்தில் இப்போராட்டங்கள் பிசுபிசுத்துப்போன போதிலும் படிப்படியாக இப்போராட்டங்களுக்கு மக்களையும் பௌத்த பிக்குகளையும் திரட்டுவதில் வெற்றி பெற்றார்கள்.

கடந்த வருட இறுதிப்பகுதியில் தேசப்பற்றாளர் முன்னணி என்ற வகையில் இவ்விரு கட்சியினரும் இனவாத பௌத்த பிக்குகளும் உருவாக்கிய அமைப்பானது, பல போராட்டங்களை நடத்தியது. இவற்றிலே சமாதானத்திற்கெதிரான தீவிர பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஜே.வி.பியானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஏற்படாவிட்டால் தேசப்பற்றாளர்முன்னணியின் துணையை தேர்தலுக்கு நாட இருந்தது. ஆனால், இவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்பதை பௌத்தபிக்குகள் உணர்ந்து விட்டனர்

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கிய மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்க முன்னர் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கூறிவந்த குற்றச்சாட்டுக்களை சீர்செய்யும் வகையில்-அல்லது மாற்றும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் அமைச்சுக்களைப் பொறுப்பேற்று தம்வசம் வைத்திருந்த 3மாத காலப்பகுதியில், எடுக்கவில்லை. அவர் உருவாக்கிய குற்றச்சாட்டுக்களுக்கு, அவராலேயே எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தம், சமாதான நடவடிக்கைகள் என்பவற்றுக்கெதிராக சிறு நகர்வு தன்னும் அவரால் மேற்கொள்ள முடியவில்லை. ஆகக் குறைந்தது இந்தியாவுக்கே அச்சுறுத்தலாக அமைகிறது என அவரால் பிரச்சாரப்படுத்தப்பட்ட 'புலிகளின் திருகோணமலை முகாம்கள்' குறித்துக் கூட அவரால்எதுவுமே செய்துவிட முடியவில்லை.

அதேவேளை மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வருமாறு வலியுறுத்தப்பட்டபோது அதனையும் செய்ய சிங்கள அரசியல் வாதிகளால் முடியவில்லை என்பதெல்லாம் சிங்களத் தீவிரவாதிகள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தி இதுவே அவர்களைத் தேர்தலில் தீவிர முடிவெடுக்க வைத்திருக்கிறது எனலாம்.

எனவே விதைப்பின் அறுவடை எவ்வாறு அமையப் போகின்றது எனக் கூற முடியாவிடினும் பௌத்த பிக்குகளின் தேர்தல் பிரவேசம் அவர்களுக்கு வெற்றியளிக்குமானால் அதன் விளைவு மகாநாயக்கர்கூறுவதுபோன்று நாட்டுக்கு ஆபத்தானதாக அமையக் கூடும். தோல்வியடையுமானால், சமாதான முயற்சிகளுக்கு உண்மையிலேயே உந்துதலாக அமையும்.

0

# குருக்கள்புதுக்குளம் பகுதியில் பேருந்து விபத்து இருவர் பலியாகினர்;16 பேர் படுகாயம்!

(செட்டிகுளம்)

வவுனியா குருக்கள்புதுக்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் இறந்தும் 16பேர் காயம் அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணிக்கு இந்த சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து முச்சக்கர வண்டிக்கு முந்திச்செல்ல இடம் கொடுத்தபோதே பேருந்து பாதையை விட்டுத்தடம் புரண்டதாக பிரயாணம் செய்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இறந்த இருவரும் காயம் அடைந்த 16பேரும் வவுனியா பொதுமருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர். இவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் 60 வயதான கந்தையா சாந்தலிங்கம் (ஆலடி உடையார்கட்டு, முல்லைத் தீவு), 04 வயதான கிருபாகரன் கிருபாஸினி (உப்புக்குளம் மன்னார்) என்று அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

வீதிவிபத்துக்கான காரணம் பேருந்து சாரதி போதியஅளவு அனுபவம் இல்லாமை என்று தெரி விக்கப்படுகிறது. மேலதிக விசாரணை யினை வவுனியா போக்குவரத்து பொலிசாரும்.,வவுனியா பொலிசாரும் மேற்கொண்டுவருகின்றனர் இறந்தவர்களின் சடலம் வவுனியா பொதுமருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (21)

# இருசக்கர உழவுஇயந்திரம் - கார் நேருக்கு நேர் மோதி விபத்து

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி நாவலர் வீதியில் நேற்று முன்தினம் கார் மற்றும் இரு சக்கர உழவு இயந்திரம் நேருக்கு நேர்மோதி விபத்துக்கு உள்ளாகி இதில் காரிற்கு சேதம் ஏற்பட்டது

மாலை 6.30 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. கிளிநொச்சியை நோக்கி சென்றகார் வட்டக்கச்சி நோக்கி வந்த உழவு இயந்திரம் என்பனவே நேருக்குநேர் மோதின. எனினும் எவருக்கும் பலத்த காயம் ஏற்படவில்லை.தேசியபெரு விளையாட்டு விழாவிற்கு வவுனியா மாவட்டத்தில் இருந்துவந்த உதைபந்தாட்ட வீரர்களின் காரே விபத்தில் சிக்கியது. (112)

# மாவீரர்களின் ஈகத்தால் நாம் வல்லமையோடு சர்வதேச அரசியல் அரங்கில் பிரவேசித்துள்ளோம்

## -மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி

(அலுவலகசெய்தியாளர்)

**இந்த மண்ணின் விடிவுக்காக இரத்தம் சிந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எமது மாவீரர்களின் ஈகத்தால் இன்று ஒரு சமாதானம் பிறந்திருக்கின்றது: ஒரு அமைதி உருவாகியிருக்கிறது. உலகமே வியந்து நிற்கக்கூடிய அளவுக்கு பேரம் பேசும் வல்லமையோடு தமிழ் தேசிய இனம் சர்வதேச அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்திருக்கிறது. இவ்வாறு தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் மாலை 4.00மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போராளி எழுத்தாளர் அம்புலியின் 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்புரை யாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சிங்களப் பேரினவாதிகள் எம்மீது எதைஎதையெல்லாம் பயன்படுத்தினார்களோ அவற்றை எல்லாம் நாம் அவர்களுக்கு எதிராகவே பயன்படுத்துவதற்கான வல்லமையை எமக்குள் வளர்த்தார் எமது தேசியத்தலைவர். அந்த வகையில் இப்போது சமாதான காலம் உருவாகியிருக்கிறது. சமாதானகாலம் என்பது ஒரு விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரையில் அது ஒரு யுத்தகளம்தான். இந்தக்களத்திலும் சனநாயகம், நாடாளுமன்றம், தேர்தல் என்ற ஆயுதங்களை எல்லாம் எம்மீது பயன்படுத்தி அடக்குமுறைகளையும், ஆக்கிரமிப்புக்களையும் திணித்த இதே சிங்கள அரசுகளுக்கு பாடம் படிப்பிப்பதற்காக இப்போதைய காலத்தில் அதே ஆயுதங்களை தூக்கிக் கையாளுகின்றநிலைக்கு நாங்களும் வளர்ந்திருக்கிறோம். ஆகவே, யுத்தகளத்தில் ஆயுதங்களைக் கையாண்டு வெற்றிகளைப் பெற்றது மட்டுமன்றி சமாதான காலத்தில் அதற்கான அஸ்திரங்களைப் பாவித்து நாங்கள் அவர்களின்



முகத்திரையை சர்வதேச அரங்கிற்கு கிளித்துக்காட்டுகின்ற ஒரு நிலைக்கு வந்திருக்கிறோம். தேர்தலை அன்று மக்கள் வெறுத்தார்கள். காரணம் அன்று அதன் பரிமாணம் வித்தியாசமாக இருந்தது. தேர்தல் எம்மை அழிக்கின்ற ஆயுதமாக அன்று பயன்படுத்தப்பட்டது.

ஆகவே, தற்போதைய மாற்றத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அன்று எம்மை அழிப்பதற்காக பயன்படுத்திய தேர்தல் என்ற ஆயுதத்தை நாம் இப்போது அவர்களை எதிர்ப்பதற்காக எமது கைகளில் ஏந்தியிருக்கிறோம். நாம் இத்தகையதொரு பெருவளர்ச்சியை கண்டிருக்கிறோம் என்பதை எங்களுடையமக்கள் ஆழமாக உணர்ந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## பரிதாப மரணம்

கத்தரிக்கோல் கழுத்தில் குத்தி பதினான்கு வயதுடைய ரேகா என்ற சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். புளியங்கூடல் ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று முன்தினம் தனது சகோதரியுடன் கத்தரிக்கோலால் படங்களை வெட்டிக் கொண்டிருந்தவேளை ரேகா கத்தரிக்கோலைப் பறித்துக்கொண்டு ஓடியபோது கதவுடன்மோதிக்கீழே விழுந்ததில் மரணம் சம்பவித்தது.

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வு முத்து ஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் கடந்த புதன் இரவு 8.00மணியளவில் பேரின்பராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன் கருத்துரையினை வழங்கியதை தொடர்ந்து முத்து ஐயன்கட்டு மாணவர்களின்வினாடி வினா போட்டியும் மகளிர் கலை பண்பாட்டு கழகத்தில் அனுசரணையுடன் பொ.கண்ணதாசனின் நெறியாள்கையில் விடுதலை கலைஞர்களின் "அன்னை நிலம்" எனும் நாடகமும் இசை நிகழ்வும் நடைபெற்றது.

பெருமளவான மக்கள், போராளிகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

## தேறாங்கண்டல் கிராமத்தில் பொது மக்கள் சந்திப்பு

துணுக்காய் பிரதேசத்தின் தேறாங்கண்டல் கிராமத்தில் கிராம மக்கள் சந்திப்பு நிகழ்வு கிராம சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

கிராம அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லல், கல்விசார் ஊக்குவிப்பு அபிவிருத்திகளில் மக்களின் பங்களிப்பு, சமகால அரசியல் நிலவரம் ஆகியவை தொடர்பான கருத்துரைகள் இடம் பெற்றன. துணுக்காய் அரசியல் துறைப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா, கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இந்நிகழ்வில் கிராம மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (24)

## நெருப்புக்காய்ச்சல் நோய் தொற்று கண்டுபிடிப்பு!

பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர்கள் அண்மையில் நடத்திய பரிசோதனை யொன்றில் அப்பகுதியில் ஏழுபேருக்கு நெருப்புக்காய்ச்சல் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.சாதாரண காய்ச்சலுக்கு சிகிச்சை பெறவைத்தியசாலைக்கு வருகை தந்தவர்களுக்கே மேற்படி நெருப்புக்காய்ச்சல் தொற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அப்பகுதி மக்களை உணவுவகைகளைப் மூடிபாதுகாத்து வைக்குமாறும் மலசலகூடங்களை ஒழுங்காகபயன்படுத்துமாறும்அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

## அபிவிருத்திச் சங்க புதிய மண்டபம் திறப்பும் சேவை நலன் பாராட்டும்

(அலுவலக செய்தியாளர்)

கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க புதிய மண்டபத் திறப்பு வைபவமும், சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கியூடெக் நிறுவன கிளி முல்லை மாவட்ட இணைப்பாளர் கணேசபிள்ளை , கிளி. பிரதேச செயலர் ஆகியோர் மங்கல விளக்கேற்றிவைக்க, கிளி. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அடுத்து கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தினை கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்.



தொடர்ந்து மறைந்த அவிருத்திச் சங்க உறுப்பினர்களின் உருவப் படங்களிற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தலைமையுரையினை அடுத்து சேவை நலன் பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது. பாராட்டு உரைகளை கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி, கரைச்சி பிரதேசச் செயலர் பொன் நித்தியானந்தம், கனகபுரம் கிராம சேவை அலுவலர் சு. பசுபதிப் பிள்ளை, கனகபுரம் கி.அ.சங்க முன்னாள் உறுப்பினர்கள் ஜீவரட்ணம், கனகேந்திரம், குலசிங்கம் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகக் கடமைபுரிந்த ஆர்.பி.இராசநாயகத்திற்கு கனகபுரம் கி.சே. அலுவலர் கனகபுரம் மக்கள் சார்பாக கணையாழி அணிவித்து கௌரவித்ததுடன் வாழ்த்துப் பாமடலும் கையளிக்கப்பட்டது. (சோ)

## தமிழ், முஸ்லிம்களின் உச்சக்கட்ட உரிமைக்கு உத்தரவாதமளிப்பேன்

### சனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களின் உச்சக்கட்ட உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு தாம் உறுதி பூண்டிருப்பதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் முன்னாள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வரவேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு நேற்றுமுன்தினம் சனாதிபதி உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்ட தேசிய முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் கூட்டணியின் செயலாளர் சுசில் பிறேம ஜெயந்த ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் புதிய கட்சியை உருவாக்க ஒன்றுபட்டுள்ளது. கூட்டணியின் கீழ் இந்தக் கட்சி வளர்ச்சியடையும். ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிறந்த அனுபவம் இருக்கின்றது. எனது நடவடிக்கைகள் சனநாயக முறையில் அமையும் என சனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(MF - 135/240) டிராக்கரர் வேலைகட்கு

விசேட விலைக்கழிவு

3. ஓவர்சைஸ் சிலிவு இறுக்கி வெட்டும் கூலி 2500/=மட்டும்

3. ஓவர்சைஸ் சிலிவு நாம் போட்டு 5000/= 3 செய்து கொடுக்கப்படும்.

3. ஓவர்சைஸ் சிலிவ் போட்டு கிரசாப் வெட்டி கொடுக்க 8000/= மட்டும்

வாட்டர்பம், மோட்டார் சைக்கிள் போர் வெட்ட, சிறங்காப் வெட்டும் கூலி 250/= மட்டும்.

பல வருட அனுபவம்மிக்க தொழிலாளர் கொண்டு செய்து கொடுக்கப்படும்.

இயந்திரம்ஸ்,
395. மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயில் அருகில்
யாழ்ப்பாணம்.

(4260)

## ஐ.தே.மு.மக்களிடம் பெற்ற ஆணையை சனாதிபதி உதாசீனம் செய்துள்ளார்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் உரிமைகள் மாத்திரமன்றி சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க நான் உறுதிபூண்டுள்ளேன்.

கொழும்பு நகர சபை வளவில் நேற்றுமுன்தினம் காலை ஐ.தே. கட்சியின் விசேட மாநாட்டில் உரையாற்றும்போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

வரும் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை வென்றெடுப்பதன் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி ஆரம்பிக்கப்படும்.

எனது அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நடவடிக்கை எடுக்க முடிந்தது.

தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்ற காரணத்தினால் தேர்தலை நடத்தவும் விடுதலைப் புலிகள் அதிகாரப் பரவலாக்கலுக்கான யோசனைகளை சமர்ப்பிக்கவும் முடிந்திருக்கிறது.

வரும் 10 ஆண்டுகளில் 30 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து வந்த நிலையில் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

மக்களிடமிருந்து ஐ.தே. முன்னணி பெற்ற ஆணையை சனாதிபதி உதாசீனம் செய்துள்ளபோதிலும் நான் சனநாயக முறையில் செயற்பட்டுள்ளேன் எனப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.



## சிந்தனைக்கு

விடுதலையை வேண்டிநிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை எந்தவொரு சக்தியாலும் அழித்து விட முடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24 -02-2004


## துரோகி எனத் தூற்றும்!

கண்டி மாவட்டத்தின் முன்னாள் பொ. ஐ. முன்னணியின் வேட்பாளரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின்- மாமனாருமான அனுருத்த ரத்வத்தைக்கு இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம் ஒதுக்கப்படவில்லை. அதாவது அவர் தேர்தலில் போட்டியிட சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி. கூட்டணியில் இடம் அளிக்கப்பட வில்லை.

அனுருத்த ரத்வத்தைக்கு இடம் ஒதுக்கப்படாமைக்கு சுதந்திரக்கட்சியில் அவரின் நிலை ஆட்டம் கண்டுவிட்டமையா? அன்றி சு.கட்சியுடன் கூட்டணி சேர்ந்துள்ள ஜே.வி.பி. அவருக்கு இடம் ஒதுக்குவது கூட்டணியின் வெற்றிக்குப் பாதகமாக அமையலாம் என வற்புறுத்தியதினாலா? அன்றி முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கான நோக்கிலா? என்பனவற்றில் எது காரணம் என உடன் அறிய முடியவில்லை. ஆயினும், இதில் காரணம் எதுவாக இருப்பினும் அத்தகையதொரு நிலைக்கு கடந்த பொதுத் தேர்தலில் அவர் உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம்களின் படுகொலைக்குக் காரணம் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமையே அடிப்படையாகும்.

ஆனால் இப்படுகொலைகள் சனநாயக விரோத, அதிகாரத் துஷ்பிரயோக, தேர்தல் வன்முறை மற்றும் மோசடிகளுடன் தொடர்புபட்டதாயினும் அனுருத்த ரத்வத்த இக்கொலையைப் புரிந்தமையானது தனியாக தான் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மட்டும் தானா? தனது கட்சி தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இல்லையா? உண்மையில் தனக்காக மட்டும் அவர் இக்கொலைச் செய்யவில்லை. தனது கட்சிக்காவுமே செய்தார்.

இதனை எவருமே மறுத்துவிட முடியாது. அதாவது அனுருத்த ரத்வத்தவின் நடவடிக்கையானது சுதந்திரக் கட்சியை தேர்தலில் வலுப்படுத்தும் நோக் கிலானதாகும். இந்நிலையில் தற்பொழுது ரத்வத்தவுக்கு தான் சுதந்திரக் கட்சி வேட்பாளர் பட்டியலில் இடமளிக்காமை அவருக்கு பெரும் ஏமாற்றம் அளிக்கும் என்பதில் ஐயத்திற்கே இடமில்லை.

வேறொரு வகையில் பார்த்தால் இது அனுருத்த ரத்வத்தவுக்கு சுதந்திரக்கட்சி முதுகில் குத்தியது போன்ற தாகும். ஆட்சிக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு தற்பொழுது நீதிமன்றத்திற்கும், வீட்டிற்குமாக அலையும் அவரை ஒரு துரோகி போல் ஒதுக்கியமையானது வருந்தத்தக் கதொன்றே. ஆனால் ரத்வத்த போன்றவர்களுக்கு இது எதிர்பார்க்கத் தக்கதே.

ரத்வத்த போன்றவர்களுக்கு தற்பொழுது வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காமை அவமானம் மட்டுமே. ஆனால், எதிர்காலத்தில் ரத்வத்தை போன்றவர்கள் தனியாக இந்த வகையில் மட்டும் புறந்தள்ளப்படப் போவதில்லை. தேசிய ரீதியில் இவர்கள் புறந்தள்ளப்படும் காலம விரைவிலேயே வரும்.

அதாவது, இலங்கை இன்று சந்தித்துள்ள பெரும்அரசியல் மற்றும்பொருளாதார நெருக்கடிகள் போன்றவற்றிற்கு அடிப்படைக்காரணம் அவர்களின் இனவாதக் கொள்கையும்- அவர்கள் தமிழ்மக்கள்மீது நடத்திய பாரிய யுத்தமுமே யாகும். இவ்யுத்தமே இன்று இலங்கை மீட்சி பெறமுடியாத அரசியல் நெருக்கடிக்குள்ளும் பொருளாதார நெருக்கடிக் குள்ளும் சிக்கிக்கொள்ளக் காரணமாகும்.

இத்தகைய யுத்தத்தை முன்னின்று நடத்தியவர்களில் அனுருத்த ரத்வத்தவும் மிகவும் முக்கியமானவராகும். இவர் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் என்ற ரீதியில் நடத்திய யுத்தமானது தமிழ் மக்களுக்கும், சிறிலங்கா அரசிற்கும் ஏற்படுத்திய அழிவுகள் பாரியதாகும். இவ் அழிவுகளை இலங்கை என்ற ரீதியில் அனைத்துத் தரப்புமேஏற்க வேண் டும். அதாவது ஒட்டுமொத்தமாக அழிவுயாவும் இலங்கைக் கானதே.

இத்தகையதொரு நிலையில் நாட்டிற்கு பேரழி வைத்தேடிக்கொடுத்தவர்கள் பட்டியலில் ரத்வத்த வின்பெயரும்தவிர்க்க முடியாது முதன்மை இடத்தை வகிக்கப்போவதை எவருமே தடுத்து நிறுத்திவிட முடியாது. ஆகையினால், இலங்கையின் பேரழிவுக்கு வழிசமைத்தவர் களில் ஒருவராக வரலாற்றில் ரத்வத்தையும் இருப்பார்.

இந்நிலையில் ரத்வத்தை எதிர்காலத்தில் ஒரு துட்டகை முனுவாகவோ பராக்கிரமபாகுவாகவோ சிங்களவர்களால் போற்றப்படப்போவதில்லை. ஒரு தேசத்து ரோகியாகவே நோக்கவும், பார்க்கவும் படுவார். தனது கட்சிக்காக அவர் செய்தவற்றையே அவரது கட்சியால் இன்று ஏற்க முடியாது உள்ளது. மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளத் தயராக இல்லாத நிலையிலேயே அவரைக் கட்சி புறம் தள்ளியுள்ளது. இந்நிலையில் நாட்டிற்காக என்ற ரீதியில் அவர் செய்த படுகொலைகளையும் அழிவு நடவடிக்கைகளையும் எவ்வாறு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். இலங்கையின் அழிவிற்கு வித்திட்ட துரோகி என தூற்றும் காலம் நீண்ட இடைவெளியில் இருக்காது.

## சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைமைத்துவம் தென்னிலங்கை அரசியலில் அவசியம்

### -நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை வெற்றி கரமாக முன்னெடுப்பதற்கு அர்ப் பணிப்புடன் செயற்படக் கூடிய தலைமைத்துவம் தென்னிலங்கை அரசியலில் அவசியமாகும் என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெறல்கேசன் தெரிவித்துள்ளார்.

அரசு-புலிகளுக்கிடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரண்டு வரு டங்கள் பூர்த்தியாகியுள்ள நிலை யில் ஏ.எவ்.பீ.செய்தி நிறுவனத் துக்கு அவர் அளித்த விசேட பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்,

சனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அரசியல் முறுகல் நிலை சமா தானமுயற்சிகளுக்கு தடைக்கல் லாக மாறியுள்ளது. தென்னி லங்கை அரசியல் முறுகல் நிலை யால் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பாரிய தேக்கநிலை சமாதான முயற்சிகளை பலவீனப்படுத்தியுள் ளது.இவ்அரசியல் முறுகல் நிலை யில் யுத்தநிறுத்த உடன்படிக் கைக்கு பேராபத்து நேரக் கூடிய அபாயமும் உள்ளது.

இனிவரும் காலங்களிலேனும் சமாதான நடவடிக்கைகளை அர்ப் பணிப்புடன் வெற்றிகரமாக முன் னெடுக்கக்கூடிய அரசியல் தலைமை இல்லையாயின் சமாதான முயற்சி களுக்கு அந்தோ கதிதான் - என்றும கூறியுள்ளார்.

## பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவது புத்த சாசனத்திற்கு எதிரான செயல்

### மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் விசனம்

(கொழும்பு)

இம்முறை தேர்தலில் வேட் பாளர்களாக பிக்குகள் வேட்பு மனுத்தாக்கல் செய்திருப்பது மகா சாசனத்துக்கு எதிர்மாறான செயற்பாடு என அஸ்கிரிய-மல் வத்தைப் பீடங்களின் அதிப திகள் தெரிவித்ததுடன் இதை மகாசங்கம் அனுமதிக்காது என வும் தெரிவித்துள்ளது. ரம்புக் வெல்ல ஸ்ரீ விபச்சி மல்வத்தை மகா நாயக்கர், உடுவலை ஸ்ரீ புத்தரக் கித அஸ்கிரிய பீட தேரர் ஆகியோர் வெளியிட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிக்குகளின் இந்த முடிவு புத்த சாசனத்தை அழிக்கும் ஆரம்ப நட வடிக்கையாகும். அத்துடன் புத்த சாசன அமைப்பு மிகுந்த விசனம டைந்துள்ளது என அவ்வறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தபால் மூலம் வாக்களிப்போர் வீழ்ச்சி மார்ச்-7வரை காலஎல்லை நீடிப்பு

(கொழும்பு)

இம்முறை பொதுத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்போரின் ஈடுபாடு குறைந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது. நேற்றுவரை ஏற்றுக்கொள்ளப்படவிருந்த மேற் படி வாக்களிப்பிற்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டிருந்த நிலை யில் போதியளவு விண்ணபங்கள் கிடைக்கப்பெறவில்லை என தெரி விக்கப்படுகிறது. இதனால் விண்ணபத்திகதி மார்ச் 07ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்காளர்களின் நன்மை கருதி 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் அந்தந்த மாவட்டச் செயல கங்களில் பார்வைக்கு விடப்பட்டிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு சனாதிபதியின் முயற்சிக்கு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல்முடியும் வரை சிங்கள பொலிஸ் திணைக்களத் தின் அனைத்து இடமாற்றங்களை யும் பதவி உயர்களையும் இடை நிறுத்துவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுமுடிவு செய்துள்ளது.

இந்த மாற்றங்களால் தேர்த லுக்கு தாக்கம்ஏற்படலாம் என்ப தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பதவி உயர் வுகள் பற்றி சனாதிபதி சந்திரிகா வுடன்ஆணைக்குழுவின் தலை வர் பேச்சு நடத்தியுள்ளார். எனினும பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றிஅவர்கூற மறுத்துள்ளார். எனினும் குறிப்பிட்ட பதவி உயர்வுகளுக்கு சனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் ஆனால் இவற்றை தற்போது நடைமுறைப் படுத்த வேண்டா மென ஐ.தே. முன்னணி உட்பட சிலகட்சிகள் கோரிக்கை விடுத் துள்ளதாகவும் ஆணைக்குழுத் தலைவர் அபேசூரிய தெரிவித் துள்ளார்.

## ரொனி டிமெல் வெளியேற்றம் சனாதிபதிக்கு அதிர்ச்சி

(கொழும்பு)

ரொனி டிமெல், மல்லிக் காடிமெல் இருவரும் பொதுசன ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சி யில் இணைந்துள்ளமை அதிர்ச்சி தருவதாக உள்ளது எனசனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித் துள்ளார்.

இவர்களது ராஜினாமா கடிதத்தை அவர் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் பொ.ஐ.முன்னணியில் இவர்கள் கொண்டிருந்த அங்கத்துவம் தொடக்கம் அவர்களுக்கு வழங் கப்பட்டிருந்த ஏனைய பொறுப்புக் களிலிருந்தும் இவர்கள் விடு விக்கப்பட்டுள்ளதாக முன்னதாக சனாதிபதி அவர்களுக்கு அனுப் பிய கடிதத்தில் தெரிவித்துள் ளார்.

## முரளிதரனை எதிர்கொள்வது சிரமமானது

### ஆஸி. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜஸ்ரின் லேங்கர்

அடுத்த மாதம் நடைபெற வுள்ள சிறிலங்காவுக்கெதிரான கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் முரளிதரனை நன்கு சமாளிக்க தயார் படுத்தியுள்ளதாக அவுஸ்தி ரேலிய அணியின் டெஸ்ட் போட்டி களில் ஆடும் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் ஜஸ்ரின் லேங்கர் தெரிவித்துள்ளார். 4 வருடங் களுக்கு முன்பு இங்கு சுற்றுப் போட்டிகளில் கலந்துகொண்ட தாகவும் இளம் வீரராக இருந்த படியால் 4 இன்னிங்சிலும் அத் தொடரில் 51 ஓட்டங்களையே பெற முடிந்ததாகவும் குறிப்பிட் டுள்ள அவர், முரளிதரனை எதிர் கொள்வது சிரமமானது எனக் கூறியுள்ளார்.

அப்போது இருந்த நிலையை விட தற்போது துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க முடியும் என்றும் தற்போது அவுஸ்திரேலியாவில் உள்நாட்டுப் போட்டிகளில் சிறப் பாகவிளையாடியதைக் குறிப்பிட் டுள்ளார். 1999ல் தான்ஒருவரே இடதுகை துடுப்பாட்ட வீரராக இருந்ததாகவும் தற்போது 5 வீரர் கள் இருப்பதால் முரளியின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடி யும் எனக் கூறியுள்ளார்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் எட்டாம் திகதிகளில் நடை பெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

### இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் சுற்றுத்தொடர் விபரம்

ஒரு நாள் போட்டிகள்

1. மார்ச் 13 முதலாவது ஒரு நாள் போட்டி(கராச்சி)
2. மார்ச் 16 2வது ஒரு நாள் போட்டி (ராவப்பிண்டி),
3. மார்ச் 19 3வது ஒருநாள் போட்டி (பெஷாவர்),
4. மார்ச் 21 4வது ஒரு நாள் போட்டி (லாகூர்),
5. மார்ச் 24 5வது ஒரு நாள் போட்டி (லாகூர்)'

டெஸ்ட் போட்டிகள்.

1. மார்ச் 28-ஏப்ரல் முதலாவது டெஸ்ட் போட்டி
2. ஏப்ரல் 5-9 இரண்டாவது டெஸ்ட் போட்டி
3. ஏப்ரல் 13-17 மூன்றாவது டெஸ்ட் போட்டி.



# தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் நான்காவது நாள் நிகழ்வுகள்

(அலுவலகசெய்தியாளர்)

மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் நான்காவது நாள் நிகழ்வுகள் நேற்று கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

தேசியக்கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் ராணிமைந்தன் ஏற்றிவைத்தார். யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுனர் கிருபாகரன், நிதர்சனம் நிறுவனத்தைச் சேர்ந்த கிருபாகரன், யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுனர் சண்முகலிங்கம், தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த கவிதா, யூடின் உஷாராணி, துடுப்பாட்ட நடுவர் இ.சிறீதரன், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணித்தலைவி தர்சினி, மன்னார் மாவட்ட கரப்பந்தாட்ட அணித்தலைவி றஞ்சனா, மட்டு உடற்பயிற்சி ஆசிரியர் பிரான்ஸிஸ் ஆகியோர் மாவீரர் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. கரப்பந்தாட்டம் பெண்களுக்கான போட்டியில் திருமலை 25-23, 25-17, 25-24 என்ற புள்ளி அடிப்படையில் யாழ் அணியை வெற்றி கொண்டது. மன்னார் அணி 25-18, 25-21, 25-15 என்ற புள்ளி அடிப்படையில் அம்பாறை அணியை வெற்றி கொண்டது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக கி.மனோகரன், தி.செல்வராசா, க.குமார், எஸ்.சசிசராஜ், பி.செல்வராசா, பெ.தேவானந்தன், எம்.ஜெயசீலன் ஆகியோர் கடமையாற்றினர்.

கபடி ஆண்களுக்கான போட்டியில் வவுனியா அணி 48-15 என்ற புள்ளி அடிப்படையில் முல்லை அணியை வெற்றிகொண்டு அரையிறுதிக்கு தெரிவானது. நாளை அம்பாறை அணியுடன் இடம் பெறும் அரையிறுதிப் போட்டியில் இந்த அணி மோதும்.

கபடி பெண்களுக்கான போட்டியில் மட்டு அணி 21-12 என்ற புள்ளி அடிப்படையில் திருமலை அணியை வெற்றி கொண்டு அரையிறுதிக்குத் தெரிவானது. நாளை நடைபெறும் கிளிநொச்சி அணியுடனான அரையிறுதியில் மட்டு அணி மோதும்.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் ஜஸ்ரின், விமலசேன, அபேகுணசேகர, முகுந்தன், லலித் ஜெயசேகர ஆகியோர் கடமையாற்றினர். நேற்றைய துடுப்பாட்டம் யாழ். கிளி அணிகளுக்கிடையே நடைபெற்றது. நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி அணியினர் முதல் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர். 29.1 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து கிளி அணி 107 ஓட்டங்களைப் பெற்றது. ராஜ்குமார் 21 ஓட்டங்களைப் பெற்றார். றொபேசன் 3 விக்கெட்டுக்களையும், ஜதார்த்தன், கிருஸ்ணராசா தலா இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். அணி 22.1 ஓவரில் 3 விக்கெட் இழப்புடன் வெற்றி இலக்கை எட்டியது. இதனால் 7 விக்கெட்டுக்களால் யாழ் அணி வெற்றிபெற்று நாளை நடைபெறும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது. அணித்தலைவர் கௌரிபாலன் 46 ஓட்டங்களையும் (ஆட்டமிழக்காது) சிவராசா 25 ஓட்டங்களையும் பெற்றார். ராஜ்குமார் இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் கிருபாகரன், முருகவேல் ஆகியோரும் நிதர்சன நிறுவனத்தின் அனுசரணையுடனான தொலைக்காட்சி நடுவராக செல்வராஜாவும் கடமையாற்றினர்.

தாச்சி ஆண்களுக்கான போட்டியில் அம்பாறை அணி சமுகமளிக்காததால் திருமலை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. நாளை 25 ஆம் திகதி நடைபெறும் அரையிறுதிப்போட்டியில் யாழ். அணியுடன் திருமலை அணி மோதும்.

தாச்சி பெண்களுக்கான போட்டியில் யாழ். அணி 7 புள்ளிகள் பெற்று அம்பாறை அணியை வெற்றியீட்டியது. நாளை திருமலை அணியுடன் நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

இப்போட்டிக்கு நடுவர்களாக கா.ஜெயசீலன், சி.த.கணேசலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

இரவு மின்னொளியில் நடைபெற்ற ஆண்டுகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டு அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானது. நாளை திருமலை அணியுடன் நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் கிளிநொச்சி அணி மோதும்.

இப் போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் விமலசேன, அபேகுணசேகரா ஆகியோர் கடமையாற்றினர்.

வலைபந்தாட்டப் போட்டியில் 59-03 என்ற புள்ளி அடிப்படையில் மட்டு அணி, அம்பாறை அணியை வெற்றி கொண்டது. இப்போட்டிக்கு நடுவர்களாக மிதுலா, செபஸ்ரியன் ஆகியோர் கடமையாற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் மன்னார் அணி யாழ் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது டிக்சோனின் கோல் போட்டார்.

இறுதிப் போட்டி 27ஆம் திகதி நடைபெறும்.

இப்போட்டிக்கு நடுவர்களாக எப்-சாண்டஸ், அமலன் ஆகியோருடன் ஜனாப் எம்.பி.பர்சூக், க.புவனேந்திரராசா ஆகியோர் கடமையாற்றினர். (சோ)

# வன்னியில் 7கட்சிகள், 4சுயேட்சைக் குழுக்கள் நேற்றுவரை வேட்புமனுத் தாக்கல்

(வவுனியா செய்தியாளர்)

வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்று வரை பதிவு செய்யப்பட்ட 7 அரசியல் கட்சிகளும், 4 சுயேட்சைக் குழுக்களாகத் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஜனாப் கபீர் முகமட் சலீம் என்ற முதன்மை வேட்பாளர் தலைமையிலான சுயேட்சைக்குழு ஒன்றும், ஜனாப். சித்திக் அப்பர் முகமது சலீம் என்ற முதன்மை வேட்பாளர் தலைமையில் சுயேட்சைக்குழு ஒன்றும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

நேற்று செல்வம் அடைக்கல நாதன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேம ரட்ண சுமதிபால தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஜனாப், நூர்டீன் மசூர் தலைமையிலான ஐக்கிய தேசிய, முன்னணி திரு. அந்தோனிப்பிள்ளை-யேசுநாதன் தலைமையிலான புதிய இடதுசாரிக் கட்சி, தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய சோசலிசக் கட்சி, பதவிய சுமணசிறிகிமி தலைமையிலான ஜாதிக்க ஹெல உறுமய ஆகிய பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், ஜனாப் ஹபீப் முகமட் சலீம் தலைமையிலான சுயேட்சைக் குழு ஒன்றும், ஜனாப் சித்திக்குல் அக்பார் மொகமட் சாதிக் தலைமையிலான சுயேட்சைக் குழு ஒன்றுமாக இரண்டு சுயேட்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ்(வ ர் அணி) ஆகிய கட்சிகள் இதுவரை தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவில்லை. (10,21)

## ஹக்கீம் அம்பாறையில்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் மரச்சின்னத்தில் போட்டியிடவுள்ளார்.

## இன்று இறுதி நாள்

(நமது நிருபர்)

தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் இன்றாகும். இன்று நண்பகல் 12.00 மணியுடன் தாக்கல் செய்வதற்கான நேரம் முடிவடைகிறது.

## திருத்தம்

## சாவு அறிவித்தல்

நேற்றைய தினசரியின் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த சாவு அறிவித்தலில் வேதநாயகம் நாகம்மா என்ற பெயர் தவறுதலாக தேவநாயகம் நாகம்மா எனப் பிரசுரிக கப்பட்டுவிட்டது என அறியத் தருகின்றோம்.

# எளிமையான முறையில் நேற்று யாழ்.நூலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுநூலகம் எளிமையான முறையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு இனவாதிகளால் தீமூட்டி எரிக்கப்பட்ட யாழ். நூலகம் புனரமைக்கப்பட்ட நிலையில் சில அரசியல்வாதிகள் தமது சுயநலத்திற்காக அதனைத் திறந்து வைக்க எடுத்த முயற்சியை யாழ். கல்விச் சமூகம் தடுத்து நிறுத்தியது.

எனினும் எளிமையான முறையில் அதனைத் திறந்து வைக்குமாறு கல்விச் சமூகம் வலியுறுத்தி வந்ததையடுத்து நேற்று நண்பகல் இது திறந்து வைக்கப்பட்டது.

இதற்கமைய தற்போது மாணவர்களுக்கு மட்டுமே நூலகத்தைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. பிற்பகல் 2.00 மணிமுதல் 5.00 மணிவரை அனுமதி வழங்கப்பட்டாலும் காலப்போக்கில் இது பொதுப் பாவனைக்கு விடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## உள்ளூர்....

இப்பகுதியினுள் அத்துமீறிப் பிரவேசித்த மூன்று இந்திய மீன்பிடிப் படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் இவர்களை சுற்றி வளைத்து மோசமான தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இவர்களுள் வாளால் வெட்டப்பட்டு படுகாயமடைந்திருந்த கனகரத்தினம் இரத்தினம் சிவானந்தன் (வயது-31) எனும் மீனவரை கடலினுள் தூக்கி வீசியுள்ளனர். உயிர்ப்பிச்சைக் கேட்டு மன்றாடிய ஏனைய இரு மீனவர்களான செல்லத்துரை செல்வராசா (வயது-40) மற்றும் அவரது மகன் செல்வராசா செல்வமோகன் (வயது-17) ஆகிய இருவரையும் வாள்களால் மோசமாக வெட்டி படுகாயப்படுத்தியதுடன் படகையும் சேதப்படுத்தியபின் அங்கிருந்து விலகியுள்ளனர்.

பின்னர் அநாதரவாக அப்பகுதியில் தரித்து நின்ற குறித்த படகு காயமடைந்த மீனவர்களுடன் மீட்டு சக மீனவர்களால் கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. படுகாயமடைந்த மீனவர்கள் இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 12ஆம் திகதி உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டு நீதிமன்றால் பின் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர் சிலரே இத்தாக்குதலில் தொடர்பு பட்டிருப்பதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (27)

## மாவீரர்....

றலில் வைத்து அவர்கள் ஆரம்பித்தனர். நூற்றுக்கணக்கில் அங்கு திரண்ட கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் யாழ். பல்கலைக் கழகஆதரவாளர்கள் "எங்கள் நிலம் எமக்கு வேண்டும் எனும் கோஷத்துடன் பிரச்சார நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

நேற்று மாலைவரை யாழ். செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த கட்சிகள் விபரம் வருமாறு,

புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிஷக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய, றுகுணுமக்கள் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுவராஜ்ய கட்சி (சுய உரிமை கட்சி) வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு.

இதேவேளை ஈழமக்களின் ஜனநாயகக் கட்சி நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்யும் என எதிர் பார்க்கப்பட்ட போதும் அவர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்திருக்கவில்லை. இன்றைய தினமே இவர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை புதிய இடதுசாரி முன்னணியில் அப்பாத்துரை குமாரசாமி முதன்மை வேட்பாளராகவும் ஐக்கிய சோசலிசக் கட்சிசார்பில் எஸ். நாகராசா முதன்மை வேட்பாளராக வும் சுவராஜ்ய கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராக இரட்ணராஜா, இரட்ணசிங்கம் குணசேகர என்பவரும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். (33,27)

## வெடிக்காதிருந்த...

படுகாயமடைந்த இருவரும் அயலவர்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்களில் ஒருவரது உடல் நிலை தொடர்ந்தும் மோசமான நிலையிலேயே இருப்பதாகத் தெரிய வருகின்றது. (27)

## கூட்டமைப்பு....

* நா.கணேசன் (தலைவர் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்.) * பரராஜசிங்கம் கனகலிங்கம் (தலைவர், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்) * வீ.ஜி. தங்கவேல்தால (மூலவள இயக்குனர்.) *பெரியதம்பி கனகசபாபதி (தலைவர் கூட்டுறவு சபை)* சிறீஸ்கரன் பத்மினி (காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம்.)* வீரசிங்கம் குணசேகரம் * நடராசா கனகரத்தினம்

## சுயேட்சையாக...

தாக்கல் செய்துள்ளது. இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் வந்திருந்த வீ.ஆனந், தசங்கரி வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தார். வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு வேட்பாளர் விபரம் பின்வருமாறு:

ஆனந்தசங்கரி வீரசிங்கம், முத்துலிங்கம் சண்முகம், அரவிந்தன் சண்முகராசா, அருள் சபாபதிப்பிள்ளை செல்லப்பா பத்மராஜா, அந்திரேஸ் பஸ்தியாம்பிள்ளை ஜோர்ஜ், குணானந்தம் இராஜரட்ணம், சிவகுமார் பொன்னுத்துரை, கிருஷ்ணராசா நடராசா, பெரியபொடி சூரியமூர்த்தி, சாந்தசொரூபன் இளையதம்பி, இராமசாமி சங்கையா, செல்வன் கந்தையன். (27,33)

## 5 தேர்தல்...

மூர்த்தி, ரி. கனகசபை, கிங்சிலி இராசநாயகம், பி. அரியநேந்திரன், எஸ். ஜெயானந்தமூர்த்தி செல்வி தங்கேஸ்வரி கதிர்காமன், எஸ். கனகரட்ணம் ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளரான அரியநாயகம் சந்திரநேருவுடன் கே. பத்மநாதன், எஸ். விவேகானந்தன், எஸ். இராசநாயகம், எஸ். சிறிகந்தராஜா, எஸ். சுந்தரலிங்கம், எ தினகரம்பிள்ளை, தோமஸ் தங்கதுரை வில்லியம், யோகாம்பிகை சபாபதி, வேலுப்பிள்ளை கல்யாணசுந்தரம், இராசசேகரம் சிவகுமார் ஆகியோரும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

(10,21, 33, 27, 32, 25)

## துயர் பகிர்வோம்

**அமரர் வேதநாயகம் நாகம்மா**

மு.கோட்டைகட்டிய குளம் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி ரத்தினகுமார் அவர்களின் அன்பு மாமியார் வேதநாயகம் நாகம்மா அவர்கள் 22/02/2004 அன்று, காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
மு.கோட்டைகட்டிய குளம்,
அ.த.க.பாடசாலை.

(சி.4111)

## கண்ணீர் அஞ்சலி

## திருமதி கனகரத்தினம் தனலட்சுமி

06-02-2004 வெள்ளிக்கிழமை வட்டக்கச்சி மாயவனூர் சிவன் ஆலய உறுப்பினர் திருமதி கனகரத்தினம் தனலட்சுமி அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவன் ஆலய
பரிபாலன சபையினர்.

(4263)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.